

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்டத்தில் நடைபெற்று வரும் சாலைப்பணிகளின் முன்னேற்றம் குறித்தும், புதிதாக மேற்கொள்ளப்பட உள்ள சாலைப்பணிகள் குறித்து, தேசிய நெடுஞ்சாலைதுறை மற்றும் நெடுஞ்சாலைதுறை அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம், மாவட்ட ஆட்சியர் சிறு கூட்டரங்கில் நடைபெற்றது.

செ.வெ.எண்: 514/2016 நாள்: 10.08.2016

# சாலைப்பணிகளை நல்ல தரத்துடன் விரைந்து முடிக்க சாலைத்துறையின் கோட்ட பொறியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுரை

கன்னியாகுமரி மாவட்டத்தில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கும், வாகன போக்குவரத்திற்கும் பயன் பெறும் வகையில் நடைபெற்று வரும் சாலைப்பணிகள் மற்றும் புதிதாக மேற்கொள்ளப்பட உள்ள சாலைப்பணிகளின் முன்னேற்றம் தொடர்பாக நாகர்கோவில் நெடுஞ்சாலை, கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம் மற்றும் தேசீய நெடுஞ்சாலை துறை கோட்டப் பொறியாளர்கள் மற்றும் உதவி கோட்டப் பொறியாளர்கள் கலந்து கொண்ட பணி ஆய்வு முன்னேற்ற கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் 05.08.2016 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடத்தப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவில் நெடுஞ்சாலை, கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டத்தின் மூலமாக நடைபெற்று வரும் கீழ்கண்ட பணிகள் விரைந்து முடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

- ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் 2015-2016 ன் கீழ் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், 74 சாலைப்பணிகள் **ரூ.5113** இலட்சத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு 5 சாலைப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதியுள்ள சாலைப் பணிகள் விரைந்து முடிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.
- சாலை பாதுகாப்பு திட்டத்தின் அடிப்படையில் **ரூ.75.00** இலட்சம் மதிப்பீட்டில் நாகர்கோவில் துவரங்காடு சாலையில் சிறு பாலம் கட்டுதல், சாலை பராமரிப்பு மற்றும் சாலை விரிவாக்கம் மேற்கொள்ளும் பணியில் பெரும்பாலான பணிகள் முடிவடைந்துள்ளது.
- சாலை பாதுகாப்பு திட்டத்தின் அடிப்படையில் **ரூ.85.00** இலட்சம் மதிப்பீட்டில் ஆரல்வாய்மொழி-நெடுமங்காடு சாலையில் சிறு பாலம் விரிவாக்கம், சாலை பராமரிப்பு மற்றும் சாலை விரிவாக்க பணியும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு சிறு பாலம் கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது. இதர பணிகளும் விரைவாக முடிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது

தேசீய நெடுஞ்சாலை துறையின் மூலமாக நடைபெற்று வரும் கீழ்கண்ட பணிகளை விரைந்து மேற்கொண்டு முடிக்க தேசீய நெடுஞ்சாலைத்துறை கோட்டப் பொறியாளருக்கு அறிவுறுத்தப்பட்டது.

- கன்னியாகுமரி மாவட்டத்தில் மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள 45 சாலைகள் 209.49 கி.மீ நீளத்திற்கு மத்திய சாலை நிதி திட்டம் (CRF) 2015-16 ன் கீழ் மேம்பாடு செய்வதற்காக ரூ.**123.00** கோடி அனுமதிக்கப்பட்டு, 35 சாலை வேலைகள் 154.39கி.மீ நீளத்திற்கு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், ஏனைய சாலைப் பணிகளும் விரைந்து முடிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.
- மாநிலங்களை இணைக்கும் மத்திய அரசின் சாலை திட்டம் (Inter State Connectivity) 2015-2016 -ன் கீழ் கன்னியாகுமரி - பழைய உச்சக்கடை சாலையில் 71.522 கி.மீ நீளத்திற்கு **ரூ.63.60** கோடி செலவில் பணி மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது. இதே திட்டதின் கீழ் பரசேரி - திங்கள் சந்தை - புதுக்கடை சாலை கி.மீ (SH-91) 24.3 கி.மீ நீளத்திற்கு ரூ. 22.61 கோடி செலவில் பணிகள் நடைபெற்று வருகிறது.
- வருடாந்திர திட்டப்பணிகள் 2014-15 கீழ் தேசியநெடுஞ்சாலை 47-ல் சுசீந்திரம் அருகில் ஓர் உயர் மட்ட பாலம் **ரூ. 6.45** கோடி செலவில் மேற்கொண்டு பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.
- சுசீந்திரம் நகருக்கு புதிதாக புறவழிச்சாலை அமைக்கும் திட்டத்தின் அடிப்படையில் **ரூ.24.50** கோடி செலவில் பழையாற்றின் குறுக்கே ஒரு உயர் மட்ட பாலம் கட்டுதல் மற்றும் சாலைப் பணிகள் மேற்கொள்வதற்காக மண் வேலைகள் மற்றும் குறுக்கு வடிகால் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.
- தேசிய நெடுஞ்சாலை காலமுறை புதுப்பித்தல் திட்டம் 2015-2016 திட்டத்தின் கீழ் தேசிய நெடுஞ்சாலை எண். 47 (புதிய எண் 544)-ல் 4.70 கி.மீ நீளத்திற்கு **ரூ. 2.16** கோடிக்கு பணி மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பணிகள் ஆரம்பித்து நடைபெற்று வருகிறது.
- தேசியநெடுஞ்சாலை எண். 47-ல் வருடாந்திர திட்டப்பணிகள் 2015-16 கீழ் மார்த்தாண்டம் மற்றும் பார்வதிபுரம ஆகிய பகுதிகளில் இரு மேம்பாலங்கள் **ரூ. 307.71** கோடி செலவில் மேற்கொள்ள பூர்வாங்க பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- ❖ தேசியநெடுஞ்சாலை எண். 47-ல் தக்கலை, தேசியநெடுஞ்சாலை எண். 47-B ல் வடசேரி - ஒழுகினசேரி பகுதிகளில் இரண்டு உயர் மட்ட பாலங்களும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பக்கம் மற்றும் சுங்கான்கடை ஆகிய இரு இடங்களில் பாதசாரிகள் சாலையை கடப்பதற்காக இரண்டு சுரங்க பாதைகளும் அமைத்திடவும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிக்கும் ஒப்பந்தம் கோரப்படவுள்ளது. மேலும் கோட்டார் - செட்டிகுளம் பகுதியில் மேம்பாலம் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியும் மேற்கொள்ளப்பட உள்ளது.
- ❖ மேலும் தேவையான இடங்களில் சிறு மற்றும் குறு பாலங்களை அகலப்படுத்தவும் வருடாந்திர திட்டப் பணிகள் மேற்கொள்ளவும் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட சாலைப்பணிகள் அனைத்தும் நல்ல தரத்துடன் விரைவில் மேற்கொள்ளப்பட்டு பொதுமக்களின் உபயோகத்திற்கு கொண்டு வர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என கோட்டப் பொறியாளர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளதுடன் தொடர்ந்து பணிகளின் முன்னேற்றம் கண்காணிக்கப்பட்டு வரப்படுகிறது என்பதும் தெரிவிக்கப்படுகிறது.

ஆய்வு கூட்டத்தில் தேசீய நெடுஞ்சாலைத்துறை கோட்டப்பொறியாளர் திரு.தனசேகரன், நெடுஞ்சாலைத்துறை கோட்டப் பொறியாளர் திருமதி.சாந்தி மற்றும் தேசீய நெடுஞ்சாலை ஆணைய அலுவலர்கள், நெடுஞ்சாலைத்துறை உதவி செயற் பொறியாளர்கள், உதவி பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

மாவட்ட ஆட்சித்தலைவர்
கன்னியாகுமரி மாவட்டம்

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.